DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 128 /2023**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | யேசு மெர்கியூ | Father Name – | அருள் |
| Age | 48 | Village – | பொம்மிநாயக்கன்பட்டி |
| | | Taluk – | உத்தமபாளயைம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2026.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுது படிக்க தெரியுமா என்றால் தமிழ் படிக்க தெரியும் எழுத தெரியாது. உறவுமுறைகள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தையும் எனது வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். எனக்கும் 3ம் பிரதிவாதிக்கும் ஞானபிரகாசம் தாத்தா என்றால் சரியா தவறா என்றால் தவறுதான்.

2. கஷ்பர் மற்றும் பல்தசார் ஆகியோர் யாருடைய சகோதரர் என்றால் என்னுடன் பிறந்த சகோதரர்கள். கஷ்பர் மற்றும் பல்தசார் ஆகியோர் 3ம்பிரதிவாதியின் சகோதரர் இல்லை என்றால் சரிதான். எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் 3ம் பிரதிவாதியின் தாத்தா ஞானபிரகாசம் என்றும், கஷ்பர் மற்றும் பல்தசார் ஆகியோர் 3ம் பிரதிவாதியின் சகோதரர்கள் என்றும் நான் சொல்லியுள்ளது தவறு என்றால் தவறுதான். எனது தாத்தா ஞானபிரகாசம் இறந்த தேதி தெரியுமா என்றால் 26.06.2018 ம் தேதி இறந்தார். எனது தாத்தா இறந்த தேதியை எனது வழக்குரையிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தந்தை அருள் இறந்த தேதி தெரியுமா என்றால் 13.03.2015ம் தேதி இறந்தார். எனது தாத்தாவிற்கு முன்பே எனது தந்தை இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. எனது தாத்தா ஞானபிரகாசத்தின் மனைவி இறந்த தேதி தெரியுமா என்றால் 2005ம் ஆண்டு இறந்தார் தேதி சரியாக தெரியாது. எனது தாயார் ஞானம்மாள் இறந்த

தேதி தெரியுமா என்றால் 13.06.2018ம் தேதி இறந்தார். எனது தாத்தா ஞானபிரகாசம் எனக்கும், எனது உடன்பிறந்த 1ம் பிரதிவாதியையும் சேர்த்து மொத்தம் 5 பேருக்கும் அவருடைய சொத்தை தனிதனியாக தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் வெளிநாட்டிற்கு செல்லும்போது 1ம் பிரதிவாதியிடமிருந்து 25 சவரன் தங்க நகையை வாங்கிவிட்டு சென்றேன் என்றால் சரியல்ல.

4. எனது சகோதரர்கள் போர்செட் தொழில் செய்து வந்தார்களா என்றால் கஷ்பர் மற்றும் பல்தசார் ஆகியோர் போர்செட் தொழில் செய்து வந்தார்கள். கஷ்பர் மற்றும் பல்தசார் ஆகியோர் தங்களது தொழிலுக்காக 1ம்பிரதிவாதியிடமிருந்து அவருடைய நகைகளை வாங்கி அடகு வைத்திருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும், எனது சகோதரர்களான கஷ்பர் மற்றும் பல்தசார் ஆகியோர் 1ம் பிரதிவாதியினுடைய நகைகளை அடகுவைத்துள்ளதால் தான் எனது தாத்தா ஞானபிரகாசத்திற்கு பாத்தியப்பட்ட பிரிக்கப்படாத பொது சொத்துக்களை 1ம்பிரதிவாதி ஜோதி மேரியே நாங்கள் நகைகளை திரும்ப கொடுக்கும்வரை அனுபவித்துக்கொள்ளட்டும் என சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி ஜோதி மேரி தான் எனது தாத்தா இறக்கும்வரை எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட பிரிக்கப்படாத சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றும், எனது தாத்தா இறந்தபின்பு நானும் எனது சகோதரர்களும் 1ம் பிரதிவாதியை அந்த சொத்தில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றிவிட்டோம் என்றால் சரியல்ல.

5. இந்த வழக்கிற்காக நான் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எனது வழக்கறிஞர் தான் தயார் செய்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் எனது மனைவியால் கொடுக்கப்பட்டது என்றும், அதனால் எனக்கு அதை குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஜோதிமேரிக்கு தானமாக கொடுத்த நிலத்திற்கு அருகில் உள்ள பிரிக்கப்படாத பொது நிலத்தில் நான் உழவடை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் 20.05.2023ம் தேதி 2ம் வாதி பாத்திமா 2ம் பிரதிவாதி மற்றும் மற்றொரு நபர் மீது அளித்த புகாருக்கு வழங்கப்பட்ட மனு ரசீது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கான புகாரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மனுவின் சாராம்சமாக மனுதாரருடைய சொத்தில் நின்றுகொண்டு மனுதாரரை தகாத வார்த்தைகளால் திட்டியதாக தான் உள்ளது என்றும், வழக்குரை சொத்தில் இருந்து திட்டியதாக இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 புகார் மனுவை யார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன். வா.சா.ஆ.2 புகார் மனுவை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 புகார் மனு ஏற்பு ரசீது யாருக்கு வழங்கப்பட்டது என்றால் எனது மனைவிக்கு வழ்ங்கப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.3 புகார் மனு ஏற்பு ரசீதில் எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் 01.06.2023 ம் தேதி. வா.சா.ஆ.3 ஆவணத்தில் மனுவின் சாராம்சமாக மனுதாரருடைய சொத்தில் நின்றுகொண்டு மனுதாரரை தகாத வார்த்தைகளால் திட்டியதாக தான் உள்ளது என்றும், வழக்குரை சொத்தில் இருந்து திட்டியதாக இல்லை என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஏதாவது தொகை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தொகை எதுவும் குறிப்பிடப்படவில்லை. 1 ம்பிரதிவாதிக்கு எனது தாத்தா எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது தந்தையும், நானும், எனதுசகோதரர்கள் கஷ்பர் மற்றும் பல்தசார் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழை நான் தான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணமாக கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் எப்போது வழங்கப்பட்டது என்றால் 30.05.2023 ம் தேதி வழங்கப்பட்டது. வா.சா.ஆ.5 ஆவணத்துடன் பட்டா எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் கிராம நிர்வாக அலுவலர் எனது தாத்தா பெயரில் உள்ள பிரிக்கப்படாத சர்வே எண்.356/1B க்கு கட்டுப்பட்ட சொத்தில் நான் அனுபவத்தில் உள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

8. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 அடங்கலை யார் வழங்கினார் என்றால் அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள புகார் மனு மற்றும் புகார் மனு ஏற்பு ரசீதுகள் வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் 01.10.2019 ம் தேதி பிரதிவாதிகளிடம்

ரூ.4,00,000 ரொக்கமாக கொடுத்தோம் என சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் ரூ.4,00,000 த்தை 500 ரூபாய் நோட்டாக கொடுத்தோமா அல்லது 2000 ரூபாய் நோட்டாக கொடுத்தோமா என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குரை சொத்தை கிரையம் செய்து கொடுக்குமாறு பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

9. பிரதிவாதிகள் ரூ.4,00,000 வாங்கி ஏமாற்றிவிட்டார்கள் என்று தேவாரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். அவ்வாறு கொடுத்த புகாரை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக வழக்குரை சொத்துஅமைந்திருக்கும் பகுதியில் 1 ஏக்கர் 68 செண்ட்நிலம் எவ்வளவு தொகை போகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் விவசாயம் செய்த வருகிறார்கள் என்றும், விவசாயத்தை தான் நம்பியுள்ளார்கள் என்றும், அதனால் வழக்குரை சொத்தை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் ரூ.4,00,000 கொடுத்ததற்கு வேறு எந்த சாட்சிகளும் இல்லை என்றால் சரிதான். எனக்கும் 1ம் பிரதிவாதி ஜோதிமேரிக்கும் எனது தாத்தா இறந்த தேதியில் இருந்து எந்த பேச்சுவார்த்தையும் இல்லை என்றால் சரியல்ல.

10. சர்வே எண்.311/3 க்கு கட்டுப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, அவர் பெயரில் பட்டா உள்ளது ஆனால் நான் தான் அனுபவித்து வருகிறேன். நான் அனுபவித்து வருவதற்கு வட்டாட்சியரால் வருவாய் ஆவணங்கள் எதுவும் வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்படவில்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து பிரதிவாதிகளுக்கு நான் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குரை சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா பெயரில் உள்ள பிரிக்கப்படாத பொது குடும்ப சொத்திலும், எனது தந்தைபெயரில் உள்ள சொத்துக்களிலும் 1ம்பிரதிவாதிக்கு பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது தாத்தா சொத்திலும் எனது தந்தை சொத்திலும் பாகம் கேட்டதால் பிரதிவாதிகள் மீது இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.4,00,000 கொடுத்ததற்கு எந்த ஆவணமும்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.07.17 18:03:30 +0530

District Munsif,
Bodinayakanur.